முதலாம்

# சைவ வினா விடை

(தோத்திரத் திரட்டுடன்)

யாழ்ப்பாணம், நல்லூர்

தவத்திரு ஆறுமுகநாவலரவர்கள்

செய்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# முதலாம்

# சைவ வினாவிடை

## தவத்திரு ஆறுமுகநாவலரவர்கள் செய்தது

காந்தளகம்

மறவன் புலவு
சாவகச்சேரி

834, அண்ணாசாலை,
சென்னை 600 002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. சைவ வினாவிடை | பக்கம் |
| கடவுள் இயல் | 1 |
| புண்ணிய பாவ இயல் | 3 |
| விபூதி இயல் | 4 |
| சிவ மூலமந்திர இயல் | 9 |
| 2. நித்திய கரும இயல் | 11 |
| மலசல மோசனம் | 12 |
| சௌசம் | 13 |
| தந்த சுத்தி | 15 |
| ஸ்நானம் | 16 |
| அநுட்டானம் | 19 |
| போசனம் | 19 |
| படித்தல் | 23 |
| இரவிற் செய்யுங் கருமம் | 24 |
| 3. சிவாலய தரிசன இயல் | 25 |
| 4. தமிழ் வேத இயல் | 31 |
| 5. தோத்திரத் திரட்டு | 39 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

காலங்கள் தோறும் சைவசமயிகள் சோதனைக்குள்ளாகி வந்துளர். சங்க காலத்திற்கு முன்னும் பின்னும், களப்பிரர் காலத்திலும், ஏற்பட்ட சோதனைகளில் இருந்து சைவ சமயிகட்கு அரண் அமைக்கச் சமயகுரவர் நால்வரின் துணை கிடைக்குமாறு சிவபெருமான் அருளினார்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும், ஏனைய திருத்தொண்டர்களும் சைவசமயிகளின் காப்பரணாக, தமிழரின் துணைவர்களாக அமைந்து அருட்பணி ஆற்றினர். அதனாலன்றோ பல நூற்றாண்டுகட்கு ஊடாகச் சைவமும் தமிழும் செழித்து வளர்ந்தன.

சைவ சமயிகள் சில நூற்றாண்டுகட்கு முன் மீண்டும் துன்பங்கட்கு உள்ளாயினர். வீறு கொண்டு எழுந்து, இருள் நீக்கும் ஞாயிறாக, ஓயாமல் ஒழியாமற் பணி புரிந்து, சைவத்தையும் தமிழையும் புறத்தாக்கங்களில் இருந்து காத்தவர் ஆறுமுகநாவலர்.

தனது காலத் தொழில் நுட்பங்களையும், சமயப் பரவலாக்க உத்திகளையும் முழுமையாகப் பயன்படுத்தி, சைவசமயிகள் உய்யுமாறு ஆக்கப் பணிகள் செய்ய ஆறுமுகநாவலர் அருள் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பயன் படுத்திய சமயப் பரவலாக்க உத்தி களுள் ஒன்றுதான் வினாவிடை முறை. சைவசமய உண் மைகள் இளம் சிறார்கட்குச் சென்றடைய மிக எளிமை யான இம் முறைமையைக் கையாண்டார்.

அன்று அவர் எழுதியவை இன்றும் பொருத்தமானவையே. சில நடைமுறை ஒழுங்குகளும், சமூகக் கண்ணோட்டங்களும் மாற்றமடைந்துள்ளனவாலும், முன்னேற்றமடைந்துள்ளனவாலும் அவற்றுக்கமைய இந் நூலைச் சைவ சமயிகள் படித்துப் பயன் பெற முயல்வார்களாக.

சைவசமயிகளே! இந்நூலை நீங்கள் படித்து உள்ளத் துள் இருத்தியும், இன்றைய இளைய சமுதாயத்தின் உள்ளத்தில் பதியுமாறும் பயனுறுத்துவீர்களாக. சைவசமயி கள் அல்லாதவருக்கும் இதில் கூறப்பட்ட உயர்ந்த கருத்து களைப் பரப்புவீர்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

# முதலாம் சைவ வினா - விடை

## 1. கடவுள் இயல்

***1. உலகத்துக்குக் கருத்தா யாவர்?***

சிவபெருமான்.

***2. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?***

என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்.

***3. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யுந் தொழில்கள் எவை?***

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றுமாம்.

***4. சிவபெருமான் இந்த மூன்று தொழில்களையும் எதைக் கொண்டு செய்வார்?***

தமது சத்தியைக் கொண்டு செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***5. சத்தி என்னுஞ் சொல்லுக்குப் பொருள் யாது?***

வல்லமை.

***6. சிவபெருமானுக்குச் சத்தி யாவர்?***

உமாதேவியார்.

***7. சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் யாவர்?***

விநாயகக் கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள் என்னும் நால்வர்.

***8. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு உமாதேவியாரோடும் எழுந்தருளி இருக்கும் முக்கிய ஸ்தானம் யாது?***

திருக்கைலாச மலை.

***9. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு எவ்விடங்களிலே நின்று அருள் செய்வார்?***

சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளிடத்திலும், சைவாச்சாரியார் இடத்திலும், சிவனடியார் இடத்திலும் நின்று அருள் செய்வார்.

*திருச்சிற்றம்பலம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. புண்ணிய பாவ இயல்

*1. சிவபெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த முதனூல்கள் எவை?*

வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம்.

*2. வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்டவை எவை?*

புண்ணியங்கள்.

*3. புண்ணியங்கள் ஆவன யாவை?*

கடவுளை வழிபடுதல்; தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல்; உயிர்களுக்கு இரங்குதல்; உண்மை பேசுதல்; செய்ந்நன்றி அறிதல் முதலானவை.

*4. புண்ணியங்களைச் செய்தவர் எதனை அநுபவிப்பர்?*

மேல் உலகங்களாகிய புண்ணிய லோகங்களிலே போய், இன்பத்தை அனுபவிப்பர்.

*5. வேத சிவாகமங்களிலே விலக்கப்பட்டவை எவை?*

பாவங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***6. பாவங்கள் ஆவன யாவை?***

கொலை, களவு, கள்ளுக் குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், விய பிசாரம், சூதாடுதல் முதலானவை.

***7. பாவங்களைச் செய்தவர் எதனை அனு பவிப்பர்?***

நரகங்களிலே விழுந்து, துன்பத்தை அனுபவிப்பர்.

*திருச்சிற்றம்பலம்.*

## 3. விபூதி இயல்

***1. சிவபெருமானை வழிபடுஞ் சமயத்துக்குப் பெயர் யாது?***

சைவ சமயம்.

***2. சைவ சமயிகள் சரீரத்திலே அவசியமாகத் தரிக்கவேண்டிய அடையாளம் யாது?***

விபூதி.

***3. விபூதி ஆவது யாது?***

பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாகிய திருநீறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. எந்த நிற விபூதி தரிக்கத்தக்கது?**

வெள்ளை நிற விபூதி.

**5. விபூதியை எதில் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும்?**

பட்டுப் பையிலேனும், சம்புடத்திலே னும் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும்.

**6. விபூதியை எந்தத் திக்குமுகமாக இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்?**

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முக மாகவேனும் இருந்துகொண்டு தரித்தல் வேண்டும்.

**7. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?**

நிலத்திலே சிந்தாவண்ணம் அண் ணாந்து, **"சிவ சிவ"** என்று சொல்லி, வலக் கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும்.

**8. விபூதி நிலத்திலே சிந்தினால் யாது செய் தல் வேண்டும்?**

சிந்திய விபூதியை எடுத்துவிட்டு, அந்த இடத்தைச் சுத்திசெய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***9. நடந்துகொண்டு ஆயினும் கிடந்து கொண்டு ஆயினும் விபூதி தரிக்கலாமா?***

தரிக்கல் ஆகாது.

***10. எக்காலங்களிலே விபூதி அவசியமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும்?***

நித்திரை செய்யப் புகும்போதும், நித்திரை விட்டெழுந்த உடனும், தந்தசுத்தி செய்த உடனும், சூரியன் உதிக்கும்போதும் அத்தமிக்கும்போதும், ஸ்நானஞ்செய்த உடனும், போசனத்துக்குப் போகும் போதும், போசனஞ் செய்தபின்னும் விபூதி அவசியமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும்.

***11. ஆச்சாரியார் ஆயினும் சிவனடியார் ஆயினும் விபூதி தந்தால் எப்படி வாங்கல் வேண்டும்?***

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கல்வேண்டும்.

***12. விபூதி வாங்கித் தரித்துக்கொண்ட பின் யாது செய்தல்வேண்டும்?***

முன்போல மீண்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***13. சுவாமி முன்னும், குரு முன்னும், சிவனடியார் முன்னும் எப்படி நின்று விபூதி தரித்தல் வேண்டும்?***

முகத்தைத் திருப்பி நின்று தரித்தல் வேண்டும்.

***14. விபூதி தாரணம் எத்தனை வகைப்படும்?***

உத்தூளனம், திரிபுண்டரம் என இரண்டு வகைப்படும்.

(திரிபுண்டரம்-மூன்று குறி.)

***15. திரிபுண்டரந் தரிக்கத்தக்க தானங்கள் யாவை?***

சிரம், நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறங்கள் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறுமாம். இவற்றுள், விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகள் இரண்டையுங் கொள்வதும் உண்டு. முழங்கைகளையும் மணிக் கட்டுகளையும் நீக்கிப் பன்னிரண்டு தானங் கொள்வதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***16. திரிபுண்டரந் தரிக்கும் இடத்து, நெற்றியில் எவ்வளவு நீளந் தரித்தல்வேண்டும்?***

இரண்டு கடைப்புருவ எல்லை வரையுந் தரித்தல் வேண்டும். அதிற் கூடினாலுங் குறைந்தாலுங் குற்றமாம்.

***17. மார்பிலும் புயங்களிலும் எவ்வளவு நீளந் தரித்தல்வேண்டும்?***

ஆறு அங்குல நீளந் தரித்தல்வேண்டும்

***18. மற்றைத் தானங்களில் எவ்வளவு நீளந் தரித்தல் வேண்டும்?***

ஒவ்வோர் அங்குல நீளந் தரித்தல்வேண்டும்.

***19. மூன்று குறிகளின் இடைவெளி எவ்வளவினதாய் இருத்தல் வேண்டும்?***

ஒவ்வோர் அங்குல அளவினதாய் இருத்தல்வேண்டும். ஒன்றை ஒன்று தீண்டல் ஆகாது.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சிவ மூல மந்திர இயல்

***1. சைவ சமயிகள் நியமமாகச் செபிக்க வேண்டிய சிவ மூலமந்திரம் யாது?***

ஸ்ரீ பஞ்சாக்ஷரம்.

***2. ஸ்ரீ பஞ்சாக்ஷர செபஞ்செய்தற்கு யோக்கியர் ஆவார் யாவர்?***

மதுபானமும், மாமிசபோசனமும் இல்லாதவராய், ஆசாரம் உடையவராய், சிவ தீக்ஷை பெற்றவராய் உள்ளவர்.

***3. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திலே எத்தனை உரு செபித்தல் வேண்டும்?***

நூற்றெட்டு உருவாயினும், பத்து உருவாயினும் நியமமாகச் செபித்தல் வேண்டும்.

***4. எந்தத் திக்கு முகமாக இருந்து செபித்தல் வேண்டும்?***

கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் இருந்து செபித்தல் வேண்டும்.

***5. எப்படி இருந்து செபித்தல் வேண்டும்?***

முழந்தாள் இரண்டையும் மடக்கி, காலோடு காலை அடக்கி, இடைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடையின் உள்ளே வலப்புறங்காலை வைத்து, இரண்டு கண்களும் மூக்கு நுனியைப் பொருந்த நிமிர்ந்திருந்து கொண்டு செபித்தல்வேண்டும்.

***6. எப்படி இருந்து செபித்தல் ஆகாது?***

சட்டை இட்டுக்கொண்டும், தலையிலே வேட்டி கட்டிக் கொண்டும், போர்த்துக் கொண்டும், குடுமியை விரித்துக்கொண்டும். கௌபீனந் தரியாமலும், வேட்டி தரியாமலும், பேசிக்கொண்டும், இருளில் இருந்துகொண்டுஞ் செபித்தல் ஆகாது.

***7. செபஞ் செய்யும்பொழுது மனம் எங்கே அழுந்திக் கிடத்தல் வேண்டும்?***

சிவபெருமான் இடத்திலேயே அழுந்திக் கிடத்தல் வேண்டும்.

***8. நிற்கும்பொழுதும், நடக்கும்பொழுதும், இருக்கும்பொழுதும், கிடக்கும் பொழுதும், மற்றைய எத்தொழிலைச் செய்யும்பொழுதும் மனத்தை எதிலே பதித்தல் வேண்டும்?***

உயிருக்கு உயிராகிய சிவபெருமானுடைய திருவடிகளிலேயே மனத்தைப் பதித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. மரிக்கும்பொழுது எப்படி மரித்தல் வேண்டும்?**

வேறு ஒன்றிலும் பற்று வையாது சிவ பெருமான் இடத்திலே பற்று வைத்து, தமிழ் வேதத்தைக் கேட்டுக்கொண்டும், ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டும் மரித்தல் வேண்டும்.

*திருச்சிற்றம்பலம்.*

## 5. நித்தியகருமஇயல்

**1. நாடோறும் நியமமாக எந்த நேரத்திலே நித்திரை விட்டெழுதல் வேண்டும்?**

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே நித்திரை விட்டெழுதல் வேண்டும்.

**2. நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?**

விபூதி தரித்துச் சிவபெருமானைத் தியானித்துத் தோத்திரஞ் செய்துகொண்டு பாடங்களைப் படித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல சல மோசனம்

***3. அதற்குப்பின் யாது செய்யத் தக்கது?***

மலசல மோசனஞ் செய்யத் தக்கது.

***4. எவ்விடத்திலே மலசலங் கழித்தல் வேண்டும்?***

திருக்கோயிலுக்குத் தூரமாய் உள்ள தனி இடத்திலே மலசலங் கழித்தல் வேண்டும்.

***5. எவ்விடங்களிலே மலசலங் கழித்தல் ஆகாது?***

வழியிலும், குழியிலும், நீர்நிலையிலும், நீர்க்கரையிலும், கோமயம் உள்ள இடத்திலும், சுடுகாட்டிலும், பூந்தோட்டத்திலும், மரநிழலிலும், உழுத நிலத்திலும், அறுகம் பூமியிலும், பசுமந்தை நிற்கும் இடத்திலும், புற்றிலும், அருவி பாயும் இடத்திலும், மலையிலும் மலசலங் கழித்தல் ஆகாது.

***6. எந்தத் திக்குமுகமாக இருந்துகொண்டு மலசலங் கழித்தல்வேண்டும்?***

பகலிலே வடக்கு முகமாகவும், இரவிலே தெற்கு முகமாகவும் இருந்து கொண்டு மலசலங் கழித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. எப்படி இருந்து மலசலங் கழித்தல் வேண்டும்?**

தலையையுங் காதுகளையும் வஸ்திரத்தினாலே சுற்றி, மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்து மலசலங் கழித்தல்வேண்டும்.

## சௌசம்

**8. மலசலங் கழித்தவுடனே யாது செய்தல் வேண்டும்?**

எழுந்து, சலக்கரையை அடைந்து, சலத்துக்கு ஒரு சாணுக்கு இப்பால் இருந்து கொண்டு சௌசஞ் செய்தல்வேண்டும்.

**9. சௌசம் எப்படிச் செய்தல் வேண்டும்?**

மண்ணுஞ் சலமுங் கொண்டு, இடக் கையினாலே குறியில் ஒருதரமும், குதத்தில் ஐந்து தரத்துக்கு மேலும், இடக்கையை இடையிடையே ஒவ்வொரு தரமும், பின்னும் இடக்கையைப் பத்துத் தரமும், இரண்டு கையையுஞ் சேர்த்து ஏழு தரமுஞ் சுத்திசெய்து, சகனத்தைத் துடைத்து கால்களை முழங்கால் வரையும், கைகளை முழங்கை வரையும் ஒவ்வொரு தரங் கழுவல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. இப்படிச் செய்தபின் யாது செய்தல் வேண்டும்?**

அவ்விடத்தை விட்டு வேறொரு துறையிலே போய், வாயையும், கண்களையும் நாசியையும், காதுகளையும், கைகால்களில் உள்ள நகங்களையுஞ் சுத்திசெய்து, எட்டுத் தரஞ் சலம் வாயிற்கொண்டு, இடப்புறத்திலே கொப்புளித்தல் வேண்டும்.

**11. வாய் கொப்புளித்தபின் யாது செய்தல் வேண்டும்?**

தலைக்கட்டு இல்லாமல் மூன்று தரம ஆசமனஞ் செய்தல்வேண்டும். (ஆசமனம் உறிஞ்சுதல்)

**12. ஆசமனம் எப்படிச் செய்தல் வேண்டும்?**

வலக்கையை விரித்துப் பெருவிரலையுஞ் சிறுவிரலையும் பிரித்துவிட்டு, பெருவிரல் அடியிற் சார்ந்த * உழுந்தமிழ்ந்து சலத்தை ஆசமித்தல் வேண்டும்.

* உழுந்தமிழ்ந்து-உழுந்து அமிழக்கூடிய அளவு

**13. சௌசத்துக்குச் சமீபத்திலே சலம் இல்லையானால் யாது செய்தல் வேண்டும்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரத்திலே சலம் மொண்டு, ஒரி டத்தில் வைத்துக்கொண்டு, மலசலங் கழித்து சௌசஞ் செய்துவிட்டு, பாத்தி ரத்தைச் சுத்திசெய்து, சலம் மொண்டு, வாய் கொப்புளித்துக் கால் கழுவல் வேண் டும்.

## தந்த சுத்தி

***14. சௌசத்துக்குப் பின் யாது செய்யத் தக்கது?***

தந்தசுத்தி செய்யத் தக்கது.

***15. எதனாலே தந்த சுத்தி செய்தல் வேண் டும்?***

சலத்தினாலே கழுவப்பெற்ற பற்கொம் பினாலேனும், இலையினாலேனுந் தந்த சுத்தி செய்தல் வேண்டும்.

***16. எந்தத் திக்கு முகமாக இருந்து தந்த சுத்தி செய்தல் வேண்டும்?***

கிழக்கு முகமாகவேனும், வடக்கு முக மாகவேனும் இருந்து தந்த சுத்தி செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***17. தந்த சுத்தி எப்படிச் செய்தல்வேண்டும்?***

பல்லின் புறத்தேயும் உள்ளேயும் செவ்வை யாகச் சுத்திசெய்து, ஒரு கழியை இரண் டாகப் பிளந்து, அவற்றினாலே நாக்கை வழித்து இடப்புறத்திலே போட்டு விட்டு, சலம் வாயிற்கொண்டு பன்னி ரண்டு தரம் இடப்புறத்திலே கொப்பு ளித்து, முகத்தை யுங் கை கால்களையுங் கழுவல் வேண்டும்.

***18. நின்றுகொண்டாயினும், நடந்து கொண் டாயினும் தந்தசுத்தி பண்ண லாமா?***

பண்ணல் ஆகாது.

## ஸ்நானம்

***19. தந்த சுத்திக்குப்பின் யாது செய்யத் தக்கது?***

ஸ்நானஞ் செய்யத் தக்கது.

***20. ஸ்நானஞ் செய்யத்தக்க நீர்நிலைகள் யாவை?***

ஆறு, ஓடை, குளம், கேணி, மடு முதலி யவையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***21. ஸ்நானஞ்செய்யுமுன் யாது செய்தல் வேண்டும்?***

கௌபீனத்தைக் கசக்கிப் பிழிந்து தரித்து, இரண்டு கைகளையும் கழுவி, வேட்டியைத் தோய்த்து அலம்பித் தரித்து, உடம்பைச் சலத்தினாலே கழுவி, செவ்வையாகத் தேய்த்துக்கொள்ளல் வேண்டும்.

***22. எவ்வளவினதாக ஆகிய சலத்தில் இறங்கி ஸ்நானஞ் செய்தல் வேண்டும்?***

தொப்பூழ் அளவினதாகிய சலத்திலே இறங்கி ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

***23. எந்தத் திக்கு முகமாக நின்று ஸ்நானஞ் செய்தல் வேண்டும்?***

நதியிலே ஆனால் அதற்கு எதிர்முகமாக நின்றும், குளம் முதலியவற்றிலே ஆனால் வடக்கு முகமாகவேனும் நின்றும் ஸ்நானஞ் செய்தல்வேண்டும்.

***24. சலத்திலே எப்படி முழுகல் வேண்டும்?***

ஆசமனஞ் செய்து, இரண்டு காதுகளையும் இரண்டு பெருவிரல்களினாலும், இரண்டு கண்களையும் இரண்டு சுட்டு விரல்களினாலும், இரண்டு நாசிகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நடுவிரல்களினாலும் மூடிக் கொண்டு சிவபெருமானைச் சிந்தித்து முழுகல் வேண்டும்.

***25. இப்படி முழுகின உடனே யாது செய் தல் வேண்டும்?***

ஆசமனஞ் செய்துகொண்டு, கரையில் ஏறி, வேட்டியைப் பிழிந்து தலையில் ஈரத் தைத் துவட்டி, உடனே நெற்றியில் விபூதி தரித்து, உடம்பில் உள்ள ஈரத்தைத் துவட் டிக் குடுமியை முடித்து, ஈரக் கௌபீனத் தைக் களைந்து, உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து, இரண்டு கைகளையுங் கழுவி, உலர்ந்த வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, ஈர வஸ்திரத்தையும் கௌபீனத்தையும் உலரும்படி கொடியிலே போடல்வேண் டும்.

***26. சிரஸ்நானஞ் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?***

கண்ட ஸ்நானமேனும், கடி ஸ்நானமே னுஞ் செய்தல் வேண்டும்.

***27. கண்ட ஸ்நானம் ஆவது யாது?***

சலத்தினாலே கழுத்தின் கீழே கழுவி, கழுவாது எஞ்சிய உடம்பை நனைந்த வஸ் திரத்தினாலே ஈரம் படும்படி துடைப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***28. சுடி ஸ்நானம் ஆவது யாது?***

சலத்தினாலே அரையின் கீழே கழுவி, கழுவாது எஞ்சிய உடம்பை நனைந்த வஸ்திரத்தினாலே ஈரம் படும்படி துடைப்பது.

## அநுட்டானம்

***29. ஸ்நானத்துக்குப்பின் யாது செய்தல் வேண்டும்?***

சுத்த சலங்கொண்டு அநுட்டானம் பண்ணி பஞ்சாக்ஷர செபஞ் செய்து தோத்திரம் பண்ணல் வேண்டும்.

## போசனம்

***30. அதற்குப் பின் யாது செய்யத் தக்கது?***

போசனஞ் செய்யத் தக்கது.

***31. போசன பந்திக்கு யோக்கியர் ஆவார் யாவர்?***

மதுபானமும், மாமிச போசனமும் இல்லாதவராயும், சமசாதியாராயும், ஆசாரம் உடையவராயும் உள்ளவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***32. எவர்கள் இடத்திலே போசனம் பண்ணல் ஆகாது?***

தாழ்ந்த சாதியார் இடத்திலும், கள்ளுக் குடிப்பவர் இடத்திலும், மாமிசம் புசிப்பவர் இடத்திலும், ஆசாரம் இல்லாதவர் இடத்திலும் போசனம் பண்ணல் ஆகாது.

***33. இவர்கள் காணும்படி போசனம் பண்ணலாமா?***

போசனம் பண்ணல் ஆகாது.

***34. எவ்வகைப்பட்ட தானத்தில் இருந்து போசனம் பண்ணல் வேண்டும்?***

கோமயத்தினாலே மெழுகப்பட்ட தானத்தில் இருந்து போசனம் பண்ணல் வேண்டும்.

***35. போசனத்துக்கு உரிய பாத்திரங்கள் யாவை?***

வாழையிலை, பலாவிலை, புன்னையிலை, பலாசிலை, பாதிரியிலை, தாமரையிலை என்பவையாம்.

***36. போசன பாத்திரங்களை யாது செய்த பின் போடல்வேண்டும்.***

சலத்தினாலே நன்றாகக் கழுவியபின் போடல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***37. வாழையிலையை எப்படிப் போடல் வேண்டும்?***

தண்டு உரியாமல் அதனுடைய அடி வலப்பக்கத்திலே பொருந்தும்படி போடல் வேண்டும்.

***38. இலை போட்ட பின் யாது செய்ய வேண்டும்?***

அதிலே சலத்தினாலே புரோக்ஷித்து, லவணம், கறி, அன்னம், பருப்பு, நெய் இவற்றைப் படைத்தல் வேண்டும்.

***39. போசனம் பண்ணும்போது எப்படி இருத்தல் வேண்டும்?***

வீண்வார்த்தை பேசாமலும், சிரியாமலும், தூங்காமலும், அசையாமலும், கால்களை மடக்கிக் கொண்டு செவ்வையாக இருத்தல் வேண்டும்.

***40. போசனம் எப்படிப் பண்ணல் வேண்டும்?***

அன்னத்திலே பிசையத்தக்க பாகத்தை வலக்கையினாலே வலப்பக்கத்திலே வேறாகப் பிரித்துப் பருப்பு, நெய்யோடு பிசைந்து சிந்தாமல் புசித்தல் வேண்டும். அதன்பின் சிறிது பாகத்தை முன்போலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்து, புளிக்கறியோடு ஆயினும் இரசத்தோடு ஆயினும், பிசைந்து, புசித்தல் வேண்டும். அதன்பின் மோரோடு பிசைந்து, புசித்தல் வேண்டும். கறிகளை இடையிடையே தொட்டுக்கொள்ளல் வேண்டும். இலையிலும் கையிலும் பற்றறத் துடைத்துப் புசித்தபின், வெந்நீரேனும் தண்ணீரேனும் பானம் பண்ணல் வேண்டும்.

***41. போசனம் பண்ணும்போது உமியத்தக்கதை எங்கே உமிழ்தல் வேண்டும்?***

இலையின் முற்பக்கத்தை மிதத்தி, அதன் கீழ் உமிழ்தல் வேண்டும்.

***42. போசனம் பண்ணும்போது மனசை எதிலே இருத்துதல் வேண்டும்?***

சிவபெருமானுடைய திருவடியிலே இருத்துதல் வேண்டும்.

***43. போசனம் முடிந்தவுடன் யாது செய் தல் வேண்டும்?***

எழுந்து, வீட்டுக்குப் புறத்தே போய்க் கைகளைக் கழுவி, சலம் வாயிற்கொண்டு, பதினாறு தரம் இடப்புறத்திலே கொப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளித்து, வாயையும் கைகளையும் கால்களையும் கழுவல் வேண்டும்.

***44. உச்சிட்டத்தை எப்படி அகற்றல்வேண்டும்?***

இலையை எடுத்து எறிந்துவிட்டு, கை கழுவிக்கொண்டு, உச்சிட்டத்தானத்தைக் கோமயஞ் சேர்ந்த சலந்தெளித்து மெழுகிப் புறத்தே போய்க் கை கழுவிவிட்டுப் பின்னும் அந்தத்தானத்தில் சலந்தெளித்து விடல்வேண்டும்.

***45. உச்சிட்டத் தானத்தை எப்படி மெழுகல் வேண்டும்?***

இடையிலே கையை எடாமலும், முன்பு தீண்டிய இடத்தைப் பின்பு தீண்டாமலும், புள்ளி இல்லாமலும் மெழுகல் வேண்டும்.

## படித்தல்

***46. போசனத்துக்குப் பின் யாது செய்யத்தக்கது?***

உபாத்தியாயர் இடத்தே கல்வி கற்கத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவிற் செய்யுங் கருமம்

***47. சூரியன் அஸ்தமிக்கும்போது யாது செய்தல் வேண்டும்?***

மலசல விமோசனஞ் செய்து, சௌசமும் ஆசமனமும் பண்ணி, விபூதி தரித்து, சிவபெருமானை வணங்கித் தோத்திரஞ் செய்துகொண்டு, விளக்கிலே பாடங்களைப் படித்தல் வேண்டும்.

***48. அதன்பின் யாது செய்தல் வேண் டும்?***

போசனஞ் செய்து, நூறடி உலாவி, சிறிது நேரஞ் சென்றபின் சயனித்தல் வேண்டும்.

***49. எப்படிச் சயனித்தல் வேண்டும்?***

கிழக்கே ஆயினும், மேற்கே ஆயினும், தெற்கே ஆயினுந் தலைவைத்து, சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டு வலக்கை மேலாகச் சயனித்தல் வேண்டும். வடக்கே தலை வைத்தல் ஆகாது.

***50. எப்போது எழுந்துவிடல் வேண்டும்?***

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே எழுந்துவிடல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சிவாலய தரிசன இயல்

*1. சிவபெருமானை வழிபடுதற்கு உரிய முக்கிய ஸ்தானம் யாது?*

திருக்கோயில்.

*2. திருக்கோயிலுக்கு எப்படிப் போதல் வேண்டும்?*

ஸ்நானஞ் செய்து, தோய்த்து உலர்ந்த வஸ்திரந் தரித்து, விபூதி இட்டுக்கொண்டு போதல்வேண்டும்.

*3. திருக்கோயிலுக்குச் சமீபித்த உடனே யாது செய்தல் வேண்டும்?*

தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்து, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே போதல் வேண்டும்.

*4. திருக்கோயிலின் உள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும்?*

பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. கிழக்கு நோக்கிய சந்நிதானத்திலும், மேற்கு நோக்கிய சந்நிதானத்திலும் எந்தத் திக்கிலே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?**

வடக்கே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

**6. தெற்குநோக்கிய சந்நிதானத்திலும், வடக்கு நோக்கிய சந்நிதானத்திலும் எந்தத் திக்கிலே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?**

கிழக்கே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

**7. எந்தத் திக்குகளிலே கால்நீட்டி நமஸ்காரம் பண்ணல் ஆகாது?**

கிழக்கிலும், வடக்கிலும் கால்நீட்டி நமஸ்காரம் பண்ணல் ஆகாது.

**8. ஆடவர்கள் என்ன நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?**

அட்டாங்க நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

**9. அட்டாங்க நமஸ்காரமாவது யாது?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டு அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

***10. பெண்கள் என்ன நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?***

பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணல்வேண்டும்.

***11. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?***

தலை, கை இரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

***12. நமஸ்காரம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?***

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல்வேண்டும். ஒருதரம், இருதரம் பண்ணுதல் குற்றம்.

***13. நமஸ்காரம் பண்ணியபின் யாது செய்தல் வேண்டும்?***

பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***14. எப்படிப் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்?***

இரண்டு கைகளையும் சிரசிலேனும் மார்பிலேனுங் குவித்து, சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு, கால்களை மெல்ல வைத்துப் பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும்.

***15. பிரதக்ஷிணம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?***

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல்வேண்டும்.

***16. சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?***

முன் விக்கினேஸ்வரரைத் தரிசனஞ் செய்து பின் சிவலிங்கப் பெருமானையும், உமா தேவியாரையுந் தரிசனஞ்செய்து, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, அதன்பின் சபாபதி, தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளைத் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

***17. விக்கினேசுவரரைத் தரிசிக்கும்பொழுது யாது செய்தல் வேண்டும்?***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளி னாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக் காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு, மூன்றுமுறை தாழ்ந்து எழுந்து கும்பிடல் வேண்டும்.

***18. சந்நிதானங்களிலே தரிசனம் பண் ணும்போதெல்லாம் யாது செய்தல் வேண் டும்?***

இரண்டு கைகளையுஞ் சிரசில் ஆயி னும், மார்பில் ஆயினும் குவித்துக் கொண்டு, மனங்கசிந்துருகத் தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

***19. எந்தக் காலத்தில் சுவாமி தரிசனஞ் செய்தல் ஆகாது?***

அபிஷேகம், நிவேதனம் முதலியவை நடக்கும்பொழுது தரிசனஞ் செய்தல் ஆகாது.

***20. அபிஷேக காலத்திலே பிரதக்ஷிண நமஸ் காரங்களும் பண்ணல் ஆகாதா?***

அப்பொழுது உட்பிரகாரத்திலே பண் ணல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. தரிசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?**

சண்டேசுரர் சந்நிதியை அடைந்து, கும்பிட்டு, மூன்றுமுறை கைகொட்டி, சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்தல் வேண்டும்.

**22. சண்டேசுர தரிசனத்தின் பின் யாது செய்தல் வேண்டும்?**

சிவ சந்நிதானத்தை அடைந்து நமஸ்காரம் பண்ணி, இருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் இயன்ற உருச்செபித்துக் கொண்டு எழுந்து வீட்டுக்குப் போதல்வேண்டும்.

**23. நித்தியமும் நியமமாக ஆலயதரிசனஞ் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?**

சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப்பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி முதலிய புண்ணியகாலங்களில் ஆயினுந் தரிசனஞ் செய்தல்வேண்டும்.

**24. திருக்கோயிலிலே செய்யத் தகாத குற்றங்கள் யாவை?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரம் இல்லாது போதல், கால் கழு வாது போதல், எச்சில் உமிழ்தல், மல சலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், ஆச னத்து இருத்தல், சயனித்தல், காலை நீட் டிக்கொண்டு இருத்தல், மயிர் கோதி முடித்தல், சூதாடல், பாக்கு வெற்றிலை உண்டல், சிரசிலே வஸ்திரந்தரித்துக் கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக்கொள்ளுதல், சட்டை இட்டுக் கொள்ளுதல், பாதரக்ஷை இட்டுக்கொள் ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிரு மாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி, துவசத் தம்பம், பலி பீடம், விக்கிரகம் என்னும் இவற்றின் நிழலை மிதித்தல், வீண்வார்த்தை பேசல், சிரித்தல், சண்டை இடுதல், விளையாடு தல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல் முதலியவையாம்.

*திருச்சிற்றம்பலம்.*

## 7. தமிழ் வேத இயல்

*1. சைவ சமயத்தவர்கள் ஓதவேண்டிய தமிழ் வேதங்கள் யாவை?*

தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. தேவாரஞ் செய்தருளினவர் யாவர்?**

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் மூவர்.

**3. திருவாசகஞ் செய்தருளினவர் யாவர்?**

மாணிக்கவாசக சுவாமிகள்.

**4. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?**

சோழநாட்டில் உள்ள சீர்காழியிலே வைதிகப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

**5. திருநாவுக்கரசு நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?**

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரில் வேளாளர் குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

**6. சுந்தரமூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?**

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூரிலே சிவப்பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***7. மாணிக்கவாசக சுவாமிகள் எங்கே திரு வவதாரஞ் செய்தருளினார்?***

பாண்டிநாட்டில் உள்ள திருவாதவூ ரிலே அமாத்தியப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

***8. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முத லிய நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவர்?***

சைவசமய குரவர்கள் எனப் பெயர் பெறுவர்.

***9. யாது காரணத்தினால் இவர்கள் சைவ சமய குரவர்கள் எனப் பெயர் பெறுவார் கள்?***

பல அற்புதங்களைக் கொண்டு, சைவ சமயமே மெய்ச் சமயம் என்று தாபித்த படியினாலே சைவசமய குரவர்கள் எனப் பெயர் பெறுவார்கள்.

***10. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?***

(1) மூன்றாம் வயசிலே உமாதேவியார் கறந்து பொற்கிண்ணத்தில் ஊட்டிய திரு முலைப் பாலை உண்டது.

(2) சிவபெருமான் இடத்திலே பொற் றாளமும், முத்துப் பல்லக்கும், முத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னமும், முத்துக் குடையும், முத்துப் பந்தரும், உலவாக்கிழியும், படிக்காசும் பெற்றது.

(3) வேதாரணியத்திலே வேதங்களினாலே பூட்டப்பட்டுத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருப்பதிகத்தினாலே திறக்கப்பட்ட திருக்கதவு அடைக்கப்பாடினது.

(4) பாலை நிலத்தை நெய்தல் நிலம் ஆகும்படி பாடினது.

(5) பாண்டியனுக்குக் கூனையுஞ் சுரத்தையும் போக்கினது.

(6) சமணர்கள் எதிரே தேவாரத் திருவேட்டை அக்கினியிலே போட்டுப் பச்சையாக எடுத்தது.

(7) வைகையாற்றிலே திருவேட்டைப் போட்டு எதிர் ஏறும்படி செய்தது.

(8) புத்த நந்தியுடைய தலையிலே இடி இடிக்கச் செய்தது.

(9) ஆற்றிலே தாமும், அடியார்களும் ஏறிய ஓடத்தைத் திருப்பதிகத்தினாலே கரை சேர்த்தது.

(10) ஆண் பனைகளைப் பெண் பனைகள் ஆக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) விஷத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தது.

(12) விஷத்தினால் இறந்த பெண்ணினுடைய எலும்பைப் பெண் ஆக்கினது.

(13) தமது திருக்கல்யாணம் தரிசிக்க வந்தவர்கள் எல்லாரையுந் தம்மோடு அக்கினியிலே புகுவித்து, முத்தியிலே சேர்த்தது.

***11. திருநாவுக்கரசு நாயனார் இடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?***

(1) சமணாகளாலே ஏழுநாள் சுண்ணாம்பறையிலே பூட்டப்பட்டு இருந்தும், வேகாது பிழைத்தது.

(2) சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டும் சாவாது பிழைத்தது.

(3) சமணர்கள் விடுத்த யானையினால் வலஞ் செய்து வணங்கப்பட்டது.

(4) சமணர்கள் கல்லிலே சேர்த்துக் கட்டிச் சமுத்திரத்தில் இடவும், அக் கல்லே தோணியாகக் கரை ஏறினது.

(5) சிவபெருமான் இடத்திலே படிக்காசு பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) வேதாரணியத்திலே வேதங்களாலே பூட்டப்பட்ட திருக்கதவு திறக்கப் பாடியது.

(7) விஷத்தினால் இறந்த பிராமணப் பிள்ளையை உயிர்ப்பித்தது.

(8) காசிக்கு அப்பால் ஒரு தடாகத்தின் உள்ளே முழுகித் திருவையாற்றில் ஒரு வாவியின் மேலே தோன்றிக் கரை ஏறினது.

***12. சுந்தரமூர்த்தி நாயனார் இடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?***

(1) செங்கற்கள் பொன்னாகப் பெற்றுக் கொண்டது.

(2) சிவபெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை விருத்தாச் சலத்தில் உள்ள ஆற்றிலே போட்டுத் திருவாரூரில் உள்ள குளத்திலே எடுத்தது.

(3) காவேரியாறு பிரிந்து வழிவிடச் செய்தது.

(4) முதலை விழுங்கிய பிராமணப் பிள் ளையை அம்முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்தது.

(5) வெள்ளையானையில் ஏறிக் கொண்டு திருக்கைலாசத்துக்கு எழுந் தருளினது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***13. மாணிக்கவாசக சுவாமிகள் இடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?***

(1) சிவபெருமானே நரியைக் குதிரை ஆக்கிக் கொண்டு வரும்படிக்கும் மண் சுமந்து அடிபடும்படிக்கும் பெற்றுக் கொண்டது.

(2) புத்தர்களைத் தருக்கத்தில் வென்று ஊமைகள் ஆக்கிப் பின் ஊமை தீர்த்துச் சைவர்கள் ஆக்கியது.

(3) பிறவி தொடுத்து ஊமையாய் இருந்த ஒரு பெண்ணை ஊமை தீர்த்துப் புத்தர்கள் வினாவிய வினாக்களுக்கு விடை சொல்லும்படி செய்தது.

(4) தம்முடைய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளி வந்து, எழுதும்படி பெற்றுக் கொண்டது.

(5) எல்லாருங் காணக் கனகசபையின் உள்ளே சிவத்தோடு கலந்தது.

***14. இந்த அற்புதங்களினாலே யாது விளங்குகின்றது?***

சைவ சமயமே மெய்ச்சமயம் என்பது நன்றாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. தமிழ் வேதம் ஓதுதற்கு யோக்கியர் யாவர்?**

மதுபானமும் மாமிசபோசனமும் இல்லாதவராய், ஆசாரம் உடையவராய், சிவ தீக்ஷை பெற்றவராய் உள்ளவர்.

**16. தமிழ் வேதத்தை எப்படி ஓதுதல் வேண்டும்?**

சுத்தி செய்யப்பட்ட இடத்தில் பீடத்தின் மேலே தமிழ் வேதப் புத்தகத்தை வைத்து, அருச்சித்து, நமஸ்காரஞ் செய்து இருந்து கொண்டு, அன்புடனே ஓதுதல் வேண்டும். புத்தகத்தை நிலத்திலேனும், ஆசனத்திலேனும், படுக்கையிலேனும், மடியிலேனும் வைத்தல் ஆகாது.

**17. தமிழ் வேதத்தை அன்புடனே நியமமாக ஓதினவர் யாது பெறுவர்?**

சிவபெருமானுடைய திருவடிக்கீழ்ப் பேரின்பத்தை அனுபவிப்பர்.

*திருச்சிற்றம்பலம்.*

வினாவும் விடையும் 135

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

# தோத்திரத் திரட்டு

## விநாயகக் கடவுள்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதில் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். 1

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தி தறுகட் பாசக்
கள்ளவினைப்பசு போதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம். 2

## சிவபெருமான்

பூமலர் மிசைவரு புனித னாதியோர்
தாமுணர் அரியதோர் தலைமை எய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கயன் முகுந்தனாம் பரமென் றுன்னியே
தங்களி லிருவருஞ் சமர்செய் துற்றுரு
அங்கவர் வெருவர அங்கி யாரெழு
புங்கவன் மலரடி போற்றி செய்குவாம். 4

நாரண னென்னுந் தேவு
நான்முகத் தவனு முக்கட்
பூரணன் றானு மாகிப்
புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேறா
அநாதியாய் உயிர்கட்கு எல்லாங்
காரண னாய மேலோன்
கழலிணை கருத்துள் வைப்பாம். 5

ஏகனே போற்றி யார்க்கும்
ஈசனே போற்றி யம்மை
பாகனே போற்றி மேலாம்
பரஞ்சுட ருருவே போற்றி
மேகமார் களனே போற்றி
விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி
முடித்திடு முதல்வா போற்றி. 6

அம்புயா சனன்மா லின்னும்
அளப்பருந் திறத்தாய் போற்றி
நம்பனே போற்றி யெங்கள்
நாதனே போற்றி கோதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பொனே மணியே போற்றி
சிவபெரு மானே போற்றி
எம்பிரான் போற்றி முக்கண்
இறைவனே போற்றி போற்றி. 7

பொங்கரா வணிக ளாகப்
புனைதரு புனிதா போற்றி
அங்கரா கத்திற் பூதி
அணிந்திடு மாதி போற்றி
வெங்கரா சலத்தின் வன்றோல்
வியன்புறம் போர்த்தாய் போற்றி
சங்கரா பரமா போற்றி
தாணுவே போற்றி போற்றி. 8

எவ்வெவர் தம்மை யேனும்
யாவரே யெனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே
அவர்க்கரு டருவாய் போற்றி
மெய்வரு தெளிவி லுன்னை
வெளிப்பட வுணர்ந்து ளோர்க்குத்
தெய்வத போக முத்தி
சிறப்பொடு தருவாய் போற்றி. 9

அம்புய மலர்மே லண்ணல்
அச்சுத னாதி வானோர்
தம்பத மெமக்கு நல்குந்
தற்பரா என்றே யாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புறு பொருட்டால் வேதம்
நவின்றிட வடைந்தோர்க் கெல்லா
உம்பர்தம் பதமு மீயும்
உலகுடை முதல்வா போற்றி. 10

வேதநா யகனே போற்றி
விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி
மறுசம யங்கண் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி
பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதக மனைத்துந் தீர்க்கும்
பராபரா போற்றி போற்றி. 11

யாவையும் படைப்பாய் போற்றி
யாவையும் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி
யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி
யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி
யாவையும் பிரிந்தாய் போற்றி. 12

சரண மங்கையோர் பங்குறை சங்கர சரணஞ்
சரண மங்கல மாகிய தனிமுதல் சரணஞ்
சரண மந்திர வடிவமாஞ் சதாசிவ சரணஞ்
சரண மும்பர்க ணாயக பசுபதி சரணம். 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாப் பிழையுங் கருதாப்
பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப்
பிழையுநின் னைந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப்
பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தரு
ளாய்கச்சி யேகம்பனே. 14

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை
யால்வருந் தோடஞ்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற்
பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டுறுந்
தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தரு
ளாய்கச்சி யேகம்பனே. 15

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற்
குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங்
காமற் கனவிலும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற்
றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய்
சிதம்பர தேசிகனே. 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமாதேவியார்

செறிதரும் உயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு வரனிட மரபின் மேவிய
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி யேத்துவாம். 17

மனிதருந் தேவரு மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமளமே
கொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும்
பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந்
நாளும் பொருந்துகவே. 18

நின்றும் இருந்துங் கிடந்து
நடந்து நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த்
தாளெழு தாமரையின்
ஒன்று மரும்பொ ருளேயருளே
உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா
முத்தி ஆனந்தமே. 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிய துன்புகழ் கற்பதுன்
நாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம்
புயத்திற் பகல்இரவாய்
நண்ணிய துன்னை நயந்தோர்
அவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென் னம்மே
புவிஏழையும் பூத்தவளே. 20

வவ்விய பாகத்து இறைவரும்
நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் டிருமணக்
கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை ஆண்டபொற்
பாதமு மாகிவந்து
வெவ்விய கால னென்மேல்
வரும்போது வெளிநிற்கவே. 21

கொள்ளேன் மனத்தினின் கோலமல்
லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன்
வியன்மூ வுலகுக்
குள்ளே யனைத்தினுக் கும்புறம்
உள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே
யளியவென் கண்மணியே. 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியே மணியி னொளியே
யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ
கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம
பாதம் பணிந்தபின்னே. 23

பின்னே திரிந்துன் னடியாரைப்
பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண்
டேன்முதன் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி
யென்னு மருமருந்தே
என்னே யினியுன்னை யான்மற
வாமனின் றேத்துவனே. 24

சொல்லும் பொருளு மெனநட
மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க்
கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ
லோகமுஞ் சித்திக்குமே. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாபதி

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 26

வையகமின் புறநின்ற
மருமலிபொற் பதம்போற்றி
கையமரு நிலைபோற்றி
கருணைமுகமலர் போற்றி
மெய்யிலகு மொளிபோற்றி
விரவியெனை யெடுத்தாண்ட
செய்யதிரு வடிபோற்றி
திருச்சிற்றம்பலம் போற்றி. 27

## சிவகாமியம்மை

மன்றின்மணி விளக்கெனலா
மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணி
னொளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ வருள்சுரக்குஞ்
சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி
நிலவுதிரு வடிபோற்றி. 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தக்ஷிணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
   றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
   பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
   யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம
   னினைந்துபவத் தொடக்கை வெல்லாம். 29

## வைரவக் கடவுள்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம். 30

## வீரபத்திரக் கடவுள்

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
மிடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம். 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியக் கடவுள்

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி. 32

அருவமு முருவு மாகி
அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமால் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தன னுலக முய்ய. 33

முழுமதி யன்ன வாறு
முகங்களு முந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும்
வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும்
அணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டான்
அவன்றவஞ் செப்பற் பாற்றே. 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டக மலர்ந்த தன்ன
மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன்
மவுலியுங் கோல மார்பும்
எண்டரு கரமீ ராறும்
இலங்கெழிற் படைகள் யாவுந்
தண்டையுஞ் சிலம்பு மார்க்குஞ்
சரணமுந் தெரியக் கண்டான். 35

வீறு கேதனம் வச்சிர மங்குசம் விசிகம்
மாறி லாதவே லபயமே வலமிடம் வரதம்
ஏறி பங்கய மணிமழுத் தண்டுவில் லிசைந்த
ஆறி ரண்டுகை யறுமுகங் கொண்டுவே
ளடைந்தான். 36

எங்க ணும்பணி வதனங்க ளெங்கணும் விழிகள்
எங்க ணுந்திருக் கேள்விக ளெங்கணுங் கரங்கள்
எங்க ணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவம்
எங்க ணுஞ்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே. 37

மூவர்கண் முதல்வன் வந்தான்
முக்க ணான்குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான்
வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரித றேற்றா
திருந்திடு மொருவன் வந்தான்
தேவர்க டேவன் வந்தான்
என்றன சின்ன மெல்லாம். 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தநம வைந்துமுகர் தந்தமுரு
கேசநம கங்கை யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம
நீபமலர் மாலை புனையுந்
தந்தைநம வாறுமுக வாதிநம
சோதிநம தற்ப ரமதாம்
எந்தைநம வென்றுமிளை யோய்நம
குமாரநம வென்று தொழுதார். 39

விரிஞ்சன்மா றேவ ராலும்
வெலற்கரும் விறலோ னாகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத
வொழுக்கமும் பிறவு மாற்றி
அருஞ்சிறை யவர்க்குச் செய்த
அவுணர்கோ னாவி கொள்வான்
பரஞ்சுட ருருவாய் வந்த
குமரனைப் பணிதல் செய்வாம். 40

மாயையின் வலியோ னாகி
மான்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம்
அரசுசெய் துகநூற் றெட்டுக்
காயம தழிவின் றாகிக்
கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற
குமரன்றாள் சென்னி வைப்பாம். 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமா முகப்பிரா னன்றி யிவ்விடை
வேறொரு துணையிலை மெய்ம்மை யீதெனத்
தேறினன் அவனடிச் சிந்தை செய்தனன்
மாறிழி யருவிநீர் வழியுங் கண்ணினான். 42

நண்ணினர்க் கினியா யோலம்
ஞானநா யகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம்
பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம்
யாவையும் படைத்தா யோலங்
கண்ணுதற் பெருமா னல்குங்
கடவுளே யோல மோலம். 43

தேவர்க டேவே யோலஞ்
சிறந்தசிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம்
வேற்படை விமலா வோலம்
பாவலர்க் கெளியா யோலம்
பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகி நின்ற
மூர்த்தியே யோல மோலம். 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னெறி யதனிற் செல்லும்
  போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து
  நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய னாக்கி
  இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
  பாதபங் கயங்கள் போற்றி. 45

துய்யதோர் மறைக ளாலுந்
  துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க
  சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட
  வேற்படை வாழ்க வன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க
  வாழ்கவிப் புவன மெல்லாம். 46

ஆறிரு தடந்தோள் வாழ்க
  அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
  குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
  யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
  வாழ்கசீ ரடியா ரெல்லாம். 47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்-என்றும்
இளையா யழகியா யேறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை. 48

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்-இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 49

வீரவே றாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்-வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை. 50

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா-முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தரும். 51

உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்-பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சு முகந்தோன்றி லாறு முகந்தோன்றும்
வெஞ்சம ரில் அஞ்சலென வேல்தோன்றும்-நெஞ்சில்
ஒருகா னினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன். 53

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே-ஒருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்காலெப் பொழுதும்
நம்பியே கைதொழுவே னான். 54

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம்
புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந்
தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்க
ளாறு மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங்
குளிரக் குதிகொண்டவே. 55

செங்கே ழடுத்த சிவனடி
வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு
தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங்
கோடைக் குமரரென
எங்கே நினைப்பினு மங்கேயென்
முன்வந் தெதிர்நிற்பனே. 56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலம் பிடித்தெம பாசஞ்
சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் றனக்கொரு காலுமஞ்
சேன்கடன் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான்
குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே
நமக்கொரு மெய்த்துணையே. 57

நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே. 58

வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங்
கூற்றன் விடுங்கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க
வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட்
டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங்
கலாப மயூரத்தனே. 59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே. 60

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே. 61

குமரா சரணஞ் சரணமென்
றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமா
டிருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான
ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு
வந்தினி யென்செயுமே. 62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோ
டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில
னேயந்த நான்முகனே. 63

## திருநந்திதேவர்

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம். 64

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண்டைவல் வினையினால் பாயுடுத் துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடு
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம். 65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு நாயனார்

பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்து முன்கட லகத்திடு
வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம். 66

## சுந்தரமூர்த்தி நாயனார்

வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவன்
உறைந்திடு முதலைவந் துதிப்ப வன்னதால்
இறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம். 67

## மாணிக்கவாசக சுவாமிகள்

கந்தமொ டுயிர்படுங் கணபங் கம்மெனச
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம். 68

## அறுபத்து மூவர்

தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ
முத்து மூரன் முகிழ்ந்த நிராமய
சித்து மூர்த்திதன் றாளிணை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம். 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டேசுரர்

மனாதிகளுக்கு எட்டாத பரமானந்த
வாழ்வினையங் கோரிலிங்க மணலாற் கூப்பித்
தனாதிதயந் தனினின்றுந் தாபித்தான்பால்
தழைத்தவன்பா லாட்டவந்து தடுக்கத் தாதை
எனாதவன்ற னிருபதமு மழுவால் துண்டித்
திகழ்தவனைப் பரபதத்து ளிருத்தித் தானும்
பினாகியரு ளடைந்தவிறற் சண்டே சன்றாள்
பிரசமல ரிறைத்தி றைஞ்சிப் பாசுவாமே.70

## சரசுவதி

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.71

## சேக்கிழார் நாயனார்

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்ல பிரானெங்கள்
பாக்கி யப்பய னாப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம்.72

திருச்சிற்றம்பலம்

## தோத்திரத் திரட்டு முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலாம்

# சைவ வினா விடை

(தோத்திரத் திரட்டுடன்)

யாழ்ப்பாணம், நல்லூர்

தவத்திரு ஆறுமுகநாவலரவர்கள்

செய்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org